பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 03 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஈரான் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவை பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.** மேற்கு ஆசியாவில் நிலவி வரும் பாதுகாப்பற்ற சூழலைத் தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்தியர்கள் உரிய எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**3.** புதுதில்லி வந்துள்ள கனடா பிரதமர் திரு. மார்க் கார்னி இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

**4.** உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் ஒரே மணி நேரத்தில் **2** லட்சத்து **51** ஆயிரத்து **446** மரக்கன்றுகள் நடப்பட்டு புதிய உலக சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**5.** ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் ஒடிசா - சென்னை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்காசியாவில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

தற்போது மேற்காசியாவில் நிலவி வரும் சூழ்நிலைகள் குறித்து இருவரும் அப்போது விவாதித்ததாக சமூக வலைதளத்தில் திரு. மோடி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முன்னுரிமை அளிக்குமாறு இஸ்ரேல் பிரதமரை தாம் வலியுறுத்தியதாகவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் போரை நிறுத்த வேண்டியது அவசியம் என்று தாம் தெரிவித்ததாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில் ஈரானின் 9 கடற்படைக் கப்பல்களைத் தாக்கி அழித்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், அவற்றில் சில கப்பல்கள் ஒப்பீட்டளவில் பெரியவை மற்றும் முக்கியமானவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் எஞ்சியுள்ள கடற்படைக் கப்பல்களையும் அமெரிக்கா குறிவைப்பதாகவும், அவை விரைவில் கடலின் அடியில் மூழ்கடிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தனிப்பட்ட தாக்குதல் ஒன்றில், ஈரானின் கடற்படைத் தலைமையகத்தையும் அமெரிக்கா பெருமளவில் அழித்துள்ளதாக திரு. ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளின் போது, அமெரிக்க ராணுவ வீரர்கள் 3 பேர் கொல்லப்பட்டதாகவும், 5 பேர் படுகாயமடைந்ததாகவும் அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் பாதுகாப்பற்ற சூழலைத் தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்தியக் குடிமக்களுக்காகத் தனித்தனியான பயண மற்றும் பாதுகாப்பு ஆலோசனைகளை இந்தியா வெளியிட்டுள்ளது.

டெல் அவீவில் உள்ள இந்திய தூதரகத்தில் இருப்பவர்கள் மற்றும் அந்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் அதிகபட்ச எச்சரிக்கையுடன்

இருக்குமாறும், அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களுக்கு அருகில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஈரானில் உள்ள இந்தியர்கள் முடிந்தவரை வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா மற்றும் ஜோர்டான் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியர்கள் விழிப்புடன் இருக்குமாறும், உரிய நேரத்தில் ஆதரவைப் பெறுவதற்கு அந்தந்த தூதரகங்களில் பதிவு செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் சவுதி அரேபியா மற்றும் குவைத் நாட்டு வெளியுறவு அமைச்சர்களுடன் தொலைபேசியில் பேசினார்.

இதற்கிடையே மேற்காசியாவில் நடைபெறும் போர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள, இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டினர்கள், தங்கள் விசா நீட்டிப்பு அல்லது தங்கும் அனுமதியை முறைப்படுத்துவது தொடர்பான உதவிகளுக்கு, வெளிநாட்டினர் மண்டல பதிவு அலுவலகத்தை அணுகுமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, அந்தப் பிராந்தியத்தின் வான்வெளி மூடப்பட்டுள்ளது.

இதனால், அந்த வழியாகச் செல்லும் விமானச் சேவைகளில் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், பயணிகளின் நலன் கருதி, தங்களின் விமானச் சேவைகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் தாமதங்கள் குறித்து தெளிவான மற்றும் உடனுக்குடனான தகவல்களை வழங்குவோம் என்று இண்டிகோ விமான நிறுவனம் உறுதியளித்துள்ளது.

பாதிக்கப்பட்ட விமானங்களின் பயணிகள், தங்களின் பயணத் திட்டங்களை மாற்றியமைக்க அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்துகொள்ள விமான நிறுவனம் உரிய வசதிகளைச் செய்து தருவதாகவும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

இதுகுறித்த அறிவிப்புகளைச் சமூக ஊடகங்கள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் உடனுக்குடன் தெரிவிப்பதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

வான்வெளி மீண்டும் திறக்கப்பட்டவுடன் நிலைமை சீரடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிறுவனம் கூறியுள்ளது.

<<<<>>>>

அதிகாரப்பூர்வ போர் அறிவிப்பு இல்லாமல் நடத்தப்பட்ட ராணுவத் தாக்குதலில், ஈரானின் உயர் தலைவர் திரு. ஆயத்துல்லா அல் கமேனி படுகொலை செய்யப்பட்டதை காங்கிரஸ் கண்டிப்பதாக அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே தெரிவித்துள்ளார்.

இந்த துயரமான தருணத்தில், உயர் தலைவரின் குடும்பத்தினருக்கும், ஈரான் மக்களுக்கும், உலகம் முழுவதும் உள்ள ஷியா சமூகத்தினருக்கும் காங்கிரஸ் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

நமதுநாட்டின் வெளியுறவுக் கொள்கையானது, பேச்சுக்கள் மூலம் சச்சரவுகளை அமைதியான முறையில் தீர்ப்பதற்கும், சர்வதேச சட்டத்தை மதிப்பதற்கும் உறுதியளிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல், 'உலகம் ஒரு குடும்பம் என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கும், மகாத்மா காந்தியின் அகிம்சை கொள்கைக்கும், முற்றிலும் முரணானது என்றும் திரு. கார்கே தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள கனடா பிரதமர் திரு. மார்க் கார்னி இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

மும்பையில் தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, நேற்று புதுதில்லி வந்த அவருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா அவரை வரவேற்றார்.

இன்று நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில் இரு நாடுகளின் பிரதமர்களும் இந்தியா - கனடா இடையிலான உத்திசார் ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு துறைகளில் இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்களை ஆய்வு செய்ய உள்ளனர்.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி மற்றும் முக்கிய கனிமங்கள், வேளாண்மை, ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு உள்ளிட்டவற்றில் ஒத்துழைத்து செயல்படுவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்த உள்ளனர்.

<<<<>>>>

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் ஈரான் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

இன்று காலை ஆசியாவில் எரிசக்தி சந்தைகள் திறக்கப்பட்டபோது, Brent கச்சா எண்ணெய் மற்றும் Nymex ஆகிய இரு வகையான எண்ணெய் விலைகளும் 10 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்தன.

இந்த திடீர் விலை உயர்வு உலகளாவிய பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தலைநகர் தில்லியில் உள்ள இந்திரா காந்தி உள்விளையாட்டு அரங்கில் இன்று “தில்லி லட்சாதிபதி மகள்” திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த 'லாட்லி' திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, “தில்லி லட்சாதிபதி மகள்” திட்டம் என மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஸ்பெயின் தலைநகர் பார்சிலோனாவில் நடைபெறும் உலக மொபைல் காங்கிரஸ் மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா பங்கேற்கிறார்.

இந்தியாவின் டிஜிட்டல் வளர்ச்சி மற்றும் தொலைத்தொடர்புத் துறையின் முன்னேற்றங்களை உலக அரங்கில் எடுத்துரைக்க இந்த மாநாடு சிறந்த வாய்ப்பாக அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மாநாட்டையொட்டி உலகளாவிய மொபைல் தொழில்நுட்பத் துறை சம்மந்தமாக சர்வதேச கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் நேற்று நடைபெற்ற மரக்கன்று நடும் விழாவில், அந்தப் பகுதி மக்கள் ஒரே மணி நேரத்தில் 2 லட்சத்து 51 ஆயிரத்து 446 மரக்கன்றுகளை நட்டு, சீனாவின் எட்டு ஆண்டு கால சாதனையை முறியடித்துள்ளனர்.

இதற்கான சான்றிதழை கின்னஸ் உலக சாதனை நிறுவனம் வாரணாசி மாநகராட்சி ஆணையர் திரு. ஹிமான்சு நாக்பாலிடம் வழங்கினார்.

இதற்கு முன்பு, 2018 ஆண்டு மார்ச் 10 அன்று சீனாவின் ஹெனான் மாகாணக் குழு மற்றும் ஒரு தனியார் நிறுவனம் இணைந்து

ஒரு லட்சத்து **53** ஆயிரத்து **981** மரக்கன்றுகளை நட்டதே உலக சாதனையாக இருந்தது.

ஈட்டி, அர்ஜூன், தேக்கு, மூங்கில் உள்ளிட்ட **27** நாட்டு வகை மரங்களும், மா, கொய்யா, பப்பாளி போன்ற பலன் தரும் மரங்களும், அஸ்வகந்தா, சதாவரி, சீந்தில் போன்ற மருத்துவ குணமுடைய மரக்கன்றுகளும் நடப்பட்டன.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள திருப்பூர் நகரில் பணியாற்றும் வடமாநில தொழிலாளர்கள் ஹோலி பண்டிகை கொண்டாட ரயில் மூலம் தங்களது சொந்த ஊர்களுக்கு புறப்பட்டனர்.

பின்னலாடை நகரான திருப்பூரில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான வட மாநில தொழிலாளர்கள் தங்கி பணியாற்றி வருகின்றனர்.

தீபாவளி, தசரா, மகர சங்கராந்தி, ஹோலி போன்ற பண்டிகை காலங்களில் அவர்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதை வாடிக்கையாக வைத்து வந்தனர்.

இந்த நிலையில் நாளை முதல் **3** நாட்கள் நாடு முழுவதும் ஹோலி பண்டிகை கொண்டாடப்பட உள்ளதால், திருப்பூரில் தங்கி

பணியாற்றும் தொழிலாளர்கள் பல்வேறு ரயிகள் மூலமாக தங்களது சொந்த ஊர்களுக்கு செல்லத் துவங்கினர்.

<<<<>>>>

இந்திய கடற்படையின் பாய்மரக் கப்பலான Kaundinya, இன்று மும்பை துறைமுகத்திற்கு அதிகாரப்பூர்வமாகத் திரும்புகிறது.

இந்த நிகழ்வை பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. சஞ்சய் சேத் கொடியசைத்து வரவேற்பார் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தக்கப்பல் அரபிக்கடலைக் கடந்து ஒமன் சென்று திரும்பிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை குறிக்கும் வகையில் இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று ஒடிசா - சென்னை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மும்பை - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டமும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

--------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**